# ஓசை

2013 - வைகாசி

காலாண்டு கவிதைச் சிற்றிதழ்

குரல் : 08 இசை: 23



ஊடகங்கள்
உடைக்கப்பட்டு
ஊமையாக்கப்படுகின்ற
ஒரு கலாசார காலகட்டத்தில்
ஓசையின்
இருபத்து மூன்றாவது இதழ்
இதய வலியுடன் ஒலிக்கிறது.

எழுத்துச் சுதந்திரம்
எடுத்தாளப்படும் இடத்தில்தான்
ஏற்றம் இருக்கும்
இல்லாமை இல்லாமல்
பொல்லாமை ஒழிந்து
நல்லாட்சி நடக்கும்.

அதனை
எடுத்துச் சொல்லும்
வல்லமையை
இலக்கியத்தின்
இயலுமையாய் காட்டும்
நல்ல கவிதைகளை
நாம் படைப்போம்.

கருத்தை
கவினுறும் வகையில்
விதைக்கும் கவிதைகளே
காலத்தின் தேவைகள்.

மண்ணில்
மனிதம் வாழ
உங்கள் கவிதைகள்
தொடர்ந்தும்
ஓசையில் இனிதாய் ஒலிக்கட்டும்.

- ஆசிரியர்

ஆசிரியர் :- மூதூர் முகைதீன்

வெளியீடு :- மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்,
நொக்ஸ் வீதி, மூதூர். 05

மனிதநேயம் மண்ணில் மலரஒலிக்கும் ஓசை

5/6/2013

30/=

# ஆர் மறப்பார்?

1. எம் மூதூர் வந்தானோ-ரெழுத்தாய் இருந்தானே
எழுதினானே!
நம் மண்ணின் மைந்தனெனநல்லபெயர் பெற்றானே
நாட்டிலெங்கும்!
பொம்மையெனக் கிடவாமல் போய் - வந்துஎழுத்தெல்லாம்
புனிதமாக்கி
அம்மாவோகதைகதையாய் அளித்தானேபழையதமிழ்
ஆட்சிசெய்ய!

2. கொட்டியாரக் கதையாய்க் கொட்டினான் ஏட்டாலே
கோலும் தாளும்
பட்டபாடெம்மட்டோபாமரரும் படித்தறிந்தே
பாசமுற்றார்!
விட்டதிலையாதொன்றும் வெண்மணற் கிராமமதும்
வெல்லுமாறு
தொட்டானே கொழுகொம்பன் தோணியாய்ச் செயற்பட்டே
தொண்டனானான்!

3. பன்னிரெண்டென்ன இனும் பல்லாண்டுபோனாலும்
படித்தவர்கள்
அன்னோனைமறவார்கள் அவன் நிறைவுக் காவியமே
அருங்கல்வெட்டே
நன்னீரைக் கொள்கலனில் நடைபோட்டுக் கொணர்கையிலும்
நவில் வான்காதை!
என்னவோ பொச்சங்கள் இலக்கியமோதிணையோவன்
றெண்ணுவானே!

4. இருந்தேனேல் எழுதுவதே - இல்லையெனில் போவதுவே'
என்றான் அன்று!
பொருந்துவதோஅககூற்று பூவரசம் பூவாற்கே
புராணத்தாற்கே?
வருங்காலம் கழகத்தார் வ.அ.வை நினைநிலைமை
வந்தேதீரும்!
அருங்கிரவுஞ் சப்புள்ளு அண்டவெளி போனாலும்
ஆர் மறப்பார்?

- தாமரைத்தீவான்
*(ஈச்சந்தீவு - கிண்ணியா)*

# தகுதியற்றோன்

அதான் ஒலியினைக் கேட்கின்ற
அன்பாவுந்தன் காதுகளில்
சதாவொலித்தும் இறையச்சம்
சற்றுமின்றிம மதையினால்
இதம் பலகிட்டும் தொழுகையினை
இடைஞ்சலாக எண்ணியிங்கு
அதபு கெட்டலைந்தாலுன்
அர்த்தமென்ன விளங்காயோ.

பாட்டினிசையைக் கேட்டந்த
பாடலிசையில் மூழ்கிடவும்
வீட்டிலுனக்கு வேலையென்றால்
விரைந்துடன் முடித்திடவும்
வாட்டும் நோயுடலைத் தீண்டிட்டால்
விரைந்துவைத்தியம் செய்திடவும்
நாட்டில் அரசியல் பேசுதற்கும்
நடந்துழைத்திடநேரமுண்டு.


கல்விபெற்றுப் பட்டமுடன்
கருத்தாய் தொழிலாலுயர்ந்திடவும்
நல்லமனைவி பிள்ளையுடன்
நலமாய் பலயிடம் சென்றிடவும்
அல்லல் பிறரின் வம்பளந்து
அயலார் நண்பரில் விளையாடவும்
தொல்லை டீ.வி,போன் பொழுதால்
தூங்கிக் கழிக்கவும் நேரமுண்டு.

பணத்தை வங்கியிலிடவே
பலமணிகாத்து அமர்ந்திடவும்
குணமாய் நண்பர் பின் சென்று
குதூகலித்து மகிழ்ந்திடவும்
இணங்கும் பெற்றோருறவு பேணி
இணங்கி பழகி பெருமையுறவும்
உணவுக் குழைத்து இல்லத்தை
உயர்வாய்க் கட்டிடநேரமுண்டு.

எத்தனை பணிவிடை செய்திடவே
எடுப்பாய் நேரமானாலுன்
சத்திய இறையைத் தொழுதிடவே
சடுதியாய்ப் பள்ளிவிரைதற்கு
புத்தியாய் நேரமில்லைஎன
படைத்தவனெண்ணா மிருகமென
இத்தரைமீதில் வாழ்கின்றாய்
ஈருலகிலும் நீ தகுதியற்றோன்.

✷

-மருதூர் ஜமால்தீன்-



புயங் குலுக்கி நில்லடா
புன்மையனைத்தும்
வெல்லடா!
பயமுறுத்தும் கயமைகள்
பட்டழியச் செய்யடா!

புலரும் புதுமை உலகிலே
பொதுமை கொண்ட
வாழ்வினை
இலகச் செய்து காத்திட
எழுச்சி கொண்டு நில்லடா!

✿

- புரட்சிக் கமால்

## சிந்தனை அலைகள்

இன்று எமக்குத் தேவை
நல்ல சிந்தனை
தனையும் சிந்தித்து
செயலாற்றுவதே அவசியம்
முன் கோபம் கொண்டு
முறையற்று
ஒழுகுவது மடைமையின் எதிரொலி

குடும்ப வாழ்விலும்
சமூக உறவாடலிலும்
எதனையும் சகித்து
பொறுத்து – சற்றுயோசித்து
நடக்கும் போதில் தான்
நல்லிணக்கம் வளர்ந்து
நன்மைபெருகி – தீமை அருகி
சுபீட்சம் மலர்ந்துவிடும்

வாழ்க்கைக் கடலில்
சிந்தனை அலைகள்
எம்மை பிரச்சினை சுறாக்களிடமிருந்து
மீட்டி – தீர்வுக் கரை
சேர்த்துவிடும்

- கலாபூஷணம்
எம். வை. எம். மீஆத்
*தும்புளுவாவை*

## வெற்றியைத் தேடுவோம்

இதுநம் வெற்றிக்
கூட்டுத் தாபனத்தின்
பன்னீர்!
சேதியின்
தலைப்புச் செய்தி!

பாருலகம் படைத்த
நம் நாயகனிடத்தில்
இருகரங்களையும்
ஏற்றிடுவோம்
வாரீர்! வாரீர்!!

நிச்சயம் கிட்டிடும்
நம் வெற்றி
தாமதமில்லை
பிரார்த்திப்போம்
நம் நாயகனிடத்தில்

அதேவேளை
நாமும் தளராது
முயற்சிசெய்திடுவோம்!
நாயன் நிச்சயம்
இன்றோநாளையோ
வெற்றிஈந்திடுவான் ...

மௌலவியா றிஸ்னா றபாய்தீன்
*அர்பகஸ்தன்னை*
*வெலம்பொட*

# மண் மறைந்திட்ட வானா ஆனா ஐயா

மூதூர் பழம் பெருமைகொண்ட கிராமம் அன்று
அது நவீனமயமாக்கப்பட்ட நகரமாக
போதுமான அறிவியலாளர்கள் எழுத்தாளர்களை
உள்வாங்கி மிளிர்ந்து திகழ்கிறதே இன்று.

முத்தான இந்த மூதூர் மண்ணில்தான் ஜனனமானார்
வஸ்தியாம் பிள்ளைஅந்தோனி இராசரத்தினம் ஐயா
எத்திக்கிலும் அவர் நினைவுதினம் இலக்கியவாதிகளினால்
பேசப்பட்டுக் கொண்டிருக்கிறதே இப்போதெல்லாம்.

வுானா ஆனா என்றவார்த்தை எங்கெங்கெல்லாம்
வெளிப்பட்டாலும் எழுத்தாளர்களுள்ளங்களில்
தேனாக இனித்திடுவாரே இந்த இலக்கிய ஜோதி
இராசரத்தினம் ஐயாஅவர்கள்.

தோணி சிறுகதையொன்றிட்டால் இன்றும் கூட
எழுத்தாளர்கள் அபிமானிகளின் உள்ளங்களை
ஆணிவேராய் உள் பதிந்துஅன்னாரைத் தானே
நினைவு கூர்ந்து இயம்புகின்றனரே.

பணமோ பொருளோ பதவிகலையோ ஐயா
என்றுமே எதிர்பார்த்திடாமலிருந்தும்
கணப்பொழுதில் ஈழத்து மக்களனைவரின்
உள்ளங்களில் முத்திரையும் பதித்துவிட்டார்.

பல்லாண்டு காலங்கள் எழுத்துலகில் செயற்பட்டார்
வானைமுட்டும் புகழுடன் வாழ்ந்தமாமனிதர்
மெல்லவே பணிகளை முடித்து சோகமடைந்திட்டு
மண்மறைந்திட்டாரே இராசரத்தினம் ஐயா.

- கலாபூஷணம்
எம். எம். அலிஅக்பர்
*கிண்ணியா*

# அவர் அப்படித்தான் ?

மனிதனாய்ப் பிறந்து விட்டு
மடமை செய்கிறார்! உடல்
புனிதம் காத்தி டாமல்
புத்தி கெட்டுப் போனார்.

சிறுநீர் கழித்தா ரென்றார்
சுத்தம் செய்ய மாட்டார்
அருவருப் பென்று சொன்னால்
அதனைக் கேட்க மாட்டார்.

வியர்வை வந்து விட்டால்
விரும்பிக் குழித்துக் கொள்வார்
அயர்வு யின்றி புத்தாடை
அணிந்து மணமும் பூசுவார்.

ஆடை அலங்கா ரத்தால்
அவர் பெரியவர்; துர்
வாடை அகற்றி டாமல்
வாழும் அவர் சிறியவர்.

மாற்றம் கொள்ளு தற்கு
மனம் விரும்பி டாமல்
நாற்றம் கொண்ட சலத்தை
நாளும் விரும்பு கின்றார்.

சுத்தம் சிறுநீரி லில்லையே
சுகம் அதில் உண்டாமோ?
அத்தர் என்று அதனை
அவர் நினைத்தார் போலும்.

- **வீ.எம். அன்சார்**
*கிண்ணியா. 02*

# ஆறிய கஞ்சல்ல?

'ஆறிய கஞ்செல்லாம்
பழங்கஞ்சி'தான்! ஆனால்
ஆண்டாண்டுசென்றாலும்
ஆறாதகஞ்சி இது!
மாறாமல் மறவாமல்
மனம் விட்டுமறையாமல்
தீராதகவலைகள் முகில்
திரண்டுவரும் நிகழ்வு.

ஏழாண்டுகள் சிறையில்
ஏகாந்தவாசத்தில்
வாழாமல் வாழ்ந்துவந்த
வரலாற்றுத் துயரம் இது
தெரியாத் தவறென்றும்
அறியாவயதென்றும்
தெரிந்தும் மனக்கல்லார்
தெரிவித்ததீர்ப்பு இது!

'சரீஆவைச் சரியாகப்
புரியாதசண்டாளர்
'சரீஆவின் போர்வையிலே
சரிகண்டகொடுமை இது!
மன்னிக்கும் மனப்பாங்கை
மண்ணுக்குத் தந்தநபி
சொல்லுக்குமாறிழைத்தோர்
சொன்னமறந்ததீர்ப்பு இது!

அபூலகப்பின் பரம்பரையும்
ஹிந்தாவின் உறவுகளும்
அணிசேர்ந்துமனமொத்து
அளித்தகொலைத் தீர்ப்பு இது!

இதயங்கள் இறுகியதால்
இறையச்சம் குறுகியதால்
இளம்பிஞ்சின் தலையறுத்த
இனம் மிருக இயல்பு இது!

நாளை மறுமையிலே
நாயன் சமூகத்தில்
றிஸானாவின் முன்னிலையில்
மீளாய்வும் தீர்ப்பும் வரும்!
தீர்ப்புவரும் போதிந்தத்
தீர்ப்பளித்தோர் மறுதளித்தோர்
மன்னிப்பைத் தரமறுத்தோர்
மரணம் எனமுடிவெடுத்தோர்
இறையளிக்கும் தீர்ப்பில் தம்
நிலைகுலைதல் நிச்சயமே!

அமரர்கள் அணிவகுத்து
அரம்பையர்கள் பூச்சொரிந்து
வெண்பட்டாடைபுனைந்து
வெண்புரவிமீதமர்ந்து
கண்கொட்டாக் காட்சியிலே
கன்னிமகள் றிஸானாதன்
சொர்க்கமனைநுழையும்
சுதந்திரத்தைஅருள் இறைவா!

☪

- *ஏறாவூர் தாஹிர்*-

# அக்கரையில் பறித்தவை

## பயம் பெயர்தல்

அற்றைநாளில்
ஆற்றங் கரையிலிருந்த
கொள்ளிவாய் பேய்களும்
வயல் வெளிகளிருந்த
மோகினிப் பிசாசுகளும்
தோப்புக்களில்
தொங்கிய பூதங்களும்
மனிதர்களுக்குள் ஒளிந்து
நகர் மயமாக்களில்
இடம் பெயர்ந்ததால்
பிள்ளைகளைப்
பயமுறுத்த
இப்போதெல்லாம்
மனிதர்களைத்தான்
காட்டவேண்டியிருக்கிறது.

- சாஸ்த செல்வராஜ்
*(விகடன் 27.2.13 )*

நகரத்துக்குவந்துபோகும்
<u>நிலா</u>

குழந்தைகளுக்கு காட்டி
சோறூட்ட
அம்மாக்கள்
காத்திருக்க கூடும்
என்ற நம்பிக்கையில்
தவறாமல்
நகரத்துக்கு
வந்து போகிறது
நிலா.

- ஜி.ஆரோக்கியதாஸ்
*(கல்கி 17.03.13)*

## வாழ்க்கை

**கடைசியாய்**
**பிதுக்கியோ**
**கிழித்தோ**
**துலக்கிவிட்டு**
**தூக்கியெறிந்ததில்**
**ஒட்டிக்கொண்டிருக்கும்**
**பற்பசையின்**
**அளவுசொல்லும்**
**அவரவர் வாழ்க்கையை.**

**( ப.சி.கார்த்திகேயன்**
**விகடன் 06.02.13)**

## விடைகளற்றவை

**மரணவீடுகளில்**
**பூக்களுக்கு**
**எப்படித்தான் வருகிறதோ**
**வேறுமணம் !**
**திருமணம் ஆனபிறகு**
**பெண்களுக்கு**
**எங்கிருந்துவருகிறதோ**
**பெரியமனுசித்தனம்!**

**எல்லாபேருந்தின்**
**முன் இருக்கைகளிலும்**
**அமர**
**எங்கிருந்துதான்**
**வருகிறார்களோ**
**சிலஅழகிகள்.**

**ஆ.நிலாதரன்**
*(விகடன் - 27.03.13)*

மெல்லமெல்ல
நுழைகிறது
கோடை
வெக்கையையும்
விடுமுறையையும்
துணைக்கழைத்தபடி...

கலாப்ரியா
(குங்குமம் 01.04.2013)

# தாவரத் தாய்

நீ
பூமியின்
குளிர்சாதனப்பெட்டி!

நீ
மனிதன் மீது
வெயில் படாதபடி
அதனைத் தாங்கும்
சுமைதாங்கி!

புயலையும்
தென்றலாக்கும்
மந்திரவாதிநீ!

இன்னா செய்தார்க்கும்
இனியவே
செய்தல் வேண்டும்
என்றுநீ
எங்கு படித்தாய்?
உன்னை வெட்டும்
மனிதருக்கும் உதவும்
தாவரத்தாய் நீ!

மண் அழிந்தால்
மனிதனும் அழிவான்
என்பதை நீ
அறிந்து கொண்டதனால்தானா
மண்ணரிப்பைத் தடுக்கும்
கவசமாக இருக்கின்றாய்!

பலகையைமட்டுமல்ல
பழத்தையும் தரும்
அமுதசுரபியல்லவா நீ.

உன் கிளைக்கரங்கள்
மனிதனை மட்டுமல்ல
பறவைகளையுமல்லவா
அணைத்துக் கொள்கின்றன.

✡

- *கலாநிதி*
**கே.எம்.எம். இக்பால்**

# பரம்பரையை ஏய்ப்பிடும் பாரம்பரியம்

அமைதி
சமாதானம்
ஒற்றுமை
எவ்வளவு உன்னதமான
வார்த்தைகளாக இவையெல்லாம்.

ஆனாலும் மிகவும் உச்சமாக
உச்சரிக்கப் படுவதோடு
உச்சரித்த கையோடு
சிதை மூட்டப்படுவதும்
இந்த உன்னதங்கள் தான்
குளம்பும் குட்டையில்
குவியல்களாக மீன்களை
அள்ளியெடுக்க முடியுமென்பது
இவர்களது சந்ததி வழிவந்தத்துவம்.

உன்னையும் என்னையும்
அவ்வப்போது தேவையேற்படும் போது
பீதியில் உறையவைத்தும்
முட்டிமோதவைத்து பகைத்தீமூட்டி
காய்நகர்த்தி தமது இருப்பை
தக்கவைப்பதில்
கில்லாடிகள் இவர்கள்
பாதாள லோகத்திலிருந்து
பூலோகத்தை பரிபாலிக்க
"புள்ளடி"சிம்மாசனத்தை மாற்றிமாற்றி
ஜனநாயகப் பெருமையுடன்
இவர்களுக்காய் அமைத்துக்
கொடுப்பதில்
எமக்குநிகர் நாங்களேதான்.

எமது இந்த பழக்கப்பட்டுப் போன
பாரம்பரிய புத்திசாலித்தனத்தை
செருப்பபாலடித்து திருத்தாதவரை
எந்தப் பரம்பரைக்கும் இதேகதிதான்.

❋

- **ஷெல்லிதாசன்**

## இக்பால் என்னும் புகழ்

சியால் கோட் ஈன்ற
சிங்கம்...
வங்கம் தந்தகவித் தங்கம்
எங்கள் இக்பால் !

உழைப்பாளன் வியர்வையின்
புனிதத்தை
உலகுக்குஉணர்த்திய
மனிதப் புனிதன்.

முறையீடும் பதிலுமாய்
குறைகளை எடுத்துரைத்த
நிறைகவிஞன்!

அடிமைத் தனத்தை
அடியோடு வெறுத்து
விடிவினைத் தேடி
விடுதலைக் கீதம் பாடியவன்.

பிறரின் தயவில் வாழும்
பேதமையை எதிர்த்து
சுயமரியாதயை
சுட்டிக்காட்டிய
சுதந்திரக் கவிஞன்.

எமது இளைஞர்களை
புல்புல் பறவைகளாய்
புறப்பட கூறி
பீனிக்ஸ்களாய்
பிறக்கச்செய்தவன் !

பன்மொழி ஆற்றலால்
பாரெங்கும் புகழ்பெற்ற
பாவலன் இக்பால் !

உலகமெல்லாம் எங்கள் நாடே
என
உலகமக்களை
ஒன்றாய் இருக்க
ஒற்றுமை கீதம் பாடிய
ஓர்மைக் கவிஞன்.

மக்கள் மனதில்
எக்காலமும் வாழும்
மங்காப் புகழ் கவிஞன் இக்பால்
ஆமாம்
இக்பால் என்றாலே
புகழ்தானே

*(எப்ரல் 21 ஆம் திகதிமகாகவி
அல்லீமா இக்பாலின் நினைவுதினம்
அதனையிட்டு இக்கவிதைபிரசுரிக்கப்படுகிறது)*

**தொன்மையூர் கவிராயர்**

## ஏன் மாற்றம்

பெய்யும் மழையே
கொஞ்சம் நில்லு
என்காதலிநடக்கிறாள்

வீசும் காற்றே
உன் வேகம் குறைத்திடு
என் காதலிசிரிக்கிறாள்

இடியேமின்னலே
உன் சப்தம் வேண்டாம்
என் காதலி தூங்குகிறாள்

நிலவே
ஓரிடம் நில்லு
உன் முகமா ?
என் காதலிமுகமா?
அழகெனப் பார்த்திட

இவ்வாறு
அவள் விரும்பும்
ஒவ்வொன்றுக்கும்
நான்
கட்டளை விடுகின்றேன்
அவளோ என்மீது
கற்களை வீசுகின்றாள்

**ஏ.எம். கஸ்புள்ளா**
*சின்னக்கிண்ணியா.02*

# முன்னேற்ற வழி

வாழ்வில் அனைவரும் முன்னேறுதல் வேண்டும்
வல்லமையுள்ள துறைகளைத் தேர்ந்தெடுத்தே
வாகாய்ச் செயல்படின் முன்னேற்றம் காணலாம்
வியாபாரம் மாத்திரம் சீவியவழிஎனக் கொண்டிடல் ஆகா.

உலகம் இயங்க ஒவ்வொரு துறையும் அவசியம்
உன்னத விஞ்ஞான யுகத்திலும் செயற்பட தொழிலாளரும் உளரே
கருவிகள் மூலம் செயல்கள் நடந்திட ஆயிடினும்
கற்றோரும் மற்றோரும் கலந்தே செயல்கள் நிறைவுறும்.

பூரிய செயற்பாடு கல்வித் துறையால் ஆயிடும்
பாரில் பிறந்தமனிதன் கற்றிடல் அவசியம் என்றே
புனித இஸ்லாம் புவியோர்க்குஉணர்த்திநிற்பதால்
பல் துறைநிபுணத்துவம் கல்வியால் பெற்றிட முனைவீர்.

ஒருவரை மிதித்துதான் முன்னேற அவாவுதல் ஆகா
கருவிலும் அடுத்தவன் நசுங்குதலில் பயன்பெறும் நினைவுகள் கூடா
பருவம் கண்டு பயன் காணும் பல்துறைமுயற்சியும் தேவை
ஒருவர்க்கொருவர் உடன்பாடுகொண்டு முயற்சித்தல் அவசியம்

❋

- *வெளிப்பன்னை* அத்தாஸ் -

# எவரெஸ்ட்

கற்பனையோ தாராளம்
கவிதைகளும் ஏராளம்
கொட்டுங்கள் மேதாளம்
தட்டுங்கள் கைத்தாளம்
பாடுகிறேன் பூபாளம்
புரியாததுஏன் தானாம் சுந்தரனே!

வேதனையில் வாடுகின்றேன்
போதனைக்கும் காலமில்லை
சோதனையில் துவல்கிறேன்
நிந்தனைக்கும் பஞ்சமில்லை
சிந்தனைசெய்து பாருங்களேன்!

பிறக்கின்றன வருடங்கள்
பறக்கின்றன தருணங்கள்
கடக்கின்றன நிமிடங்கள்
செய்கின்றேன் பலகருமங்கள்
விடைகிடைக்காதது ஏன்தானாம்?

குணத்திலே நீயொரு துரும்பு
அன்பிலே நீயொரு அரும்பு
முயற்சியில் நீயொரு எறும்பு
விகடத்தில் நீயொரு குறும்பு
மனதிலே நீயெனக்கு தளும்பு
நினைவிலே நீயெனக்கு விருந்து!

பெயரிலே நீயொரு ரகரம்
வீரத்திலே நீஒரு சிங்கம்

நினைத்தால் புன்னகை அமரும் அதரம்
என் மனதிலே நீஎன்றும் எவரெஸ்டு சிகரம்!!!

வெலிகமறிம்ஸா முகம்மத்

# தென்றல்

தெற்குத் திசை
பிரசவித்த
பச்சிளங் குழந்தை!
காதல் கனியை
மாந்திடஅருந்தி
காதலர் ஆடிடும்
ஏதம் ஏதுமில்லா
ஊஞ்சல்!
கவிவானர்களின்
கற்பனைச் சோலையில்
ஊற்றெடுக்கும்
கவிதைப் புனல்!
வண்ணமலர்கள்
புன்னகைக்கும்
பூஞ்சோலைக்
கன்னியின் மஞ்சம்!
மன்மதப் பாணம்!!

*கிண்ணியா முத்தாலிப்*



# சித்திரைப் பெண்ணாள்

"சித்திரைப் பெண்ணாள் வந்தாள் - எம்
சிந்தையெலாம் மகிழ்ச்சி தந்தாள்
பத்தரைமாற்றுபசும் பொண்ணாள் - எம்
பாவங்கள் நீக்கும் அருள் மனத்தாள்
இத்தரைமாந்தர் சிறக்க நினைத்தாள்
இன்பத்தைநன்கு அள்ளித் தெளித்தாள்
முத்திரை பதித்தும் விடுவாள் - எம்
முகவுரை முழுவதும் வரைவாள்"

"வஞ்சகம் நோய் பிணியறுப்பாள்
வானுலோர் மகிழவும் இருப்பாள்
சஞ்சலம் நீங்கமிக விரைவாள்
சந்தப்பவாதம் அழிப்பாள்
பஞ்சமா பாதகம் துடைப்பாள்
பாருளோர் வாழவும் உழைப்பாள்
நெஞ்சிலேநிறைந்தும் நிற்பாள்
நித்திலம் கொழிக்கவும் செய்வாள்"


"சாதிசமயச் சண்டை வெறுப்பாள்
சமாதானம் நிலவச் செய்வாள்
நீதிநெறிமுறைகாப்பாள்
நிலையானவாழ்வும் தருவாள்
மோதிமுட்ட விடமாட்டாள்
முடிவான தீர்வைக் கொடுப்பாள்
ஜோதிவடிவாக மிளிர்வாள்
சுடர்விடும் சித்திரைப் பெண்ணாள்"

**சீ.என். துரைராஜா**
*திருகோணமலை*

# ஐக்கியம் எதிர்பார்ப்போம்

குளத்தைக் கலக்கி
பருந்துக்கு இரைதேட
கொடுத்தகதை
இலட்சியம் இலட்சியம் என்றதமிழன்
இலட்சணம் தான் என்ன
கொள்கை வழி வந்தோமாநாம்
கொடும்பகைதான் கண்டோமா
விண்ணைமுட்டவாய்ஜாலம்
விளைந்ததுதான் பூஜ்ஜியம்
எண்ணத்தில் துணிவுகொண்டு
எதுவரினும் ஒற்றுமைஒற்றுமை
வாழ்வாசாவாதமிழா
உன்னதலட்சியத்துக்காக
ஒருகொடியின் கீழ்
"ஐக்கியத்தைஎதிர்பார்ப்போம்"

**போலிகை மறவன்**
*திருகோணமலை*



# அதிகாரம்

கருத்துச் சுதந்திரம்
கருக்கலைப்புசெய்யப்பட்ட
சிசுவாய்
உருவமும் உயிரும் இல்லாமல்
பிரசவமாக
உண்மைகள் உறங்கும்.

ஆட்சிஅதிகாரசுகத்தை
ஆண்டாண்டு காலமாய்
அனுபவிக்க
இனவாதப் பூதங்களை
உருவாக்கி
இடையிடையே உலாவிட
பிணவாடைவீசும்.

பெரும்பான்மை பலம்
பேரினவாதத்தை வளர்க்க
பிரிவினைப் பேய்கள்
ஊரினில் உயிர்ப்பாகி
இரத்தம் தேடிஅலையும்.

தர்மவான்களின் தாக்குதல்களை
தற்காப்புக்காக கூட
தடுக்க முயன்றாலும்
கலகக்காரனாய் காட்டும்
கலியுகம்

- மூதூர் பஹ்ரி

# துணிவாய் தோழா

எழுவாய் தோழா
எழுவாய்..........!
எழுவான் கதிராய்
எரிக்கும் சுடராய்
எழுவாய்............!

உழைப்போர் பலபேர்
அதனை
உறிஞ்சிஎடுப்போர்
சிலபேர்
உலகின் விதியாய்
இதனைவைத்து
உன்னைஉறிஞ்சி
உயரும் வர்க்கம்
ஒழிந்திடநீயும்
எழுவாய்.............!

வியர்வைமுத்தை
விளைச்சலாக்க
கயவர் அதனை
கவர்தல் முறையோ...............?
தயவாய் கேட்டால்
தரவேமாட்டார்
பயந்துபணிந்தது
போதும் இனியும்
இணைந்துஒன்றாய்
துணிந்துஎழுவாய்
துயரம் தீரும்.

☼

- மாவலிமைந்தன்.

# பாராட்டுப் பா



## வாழ்த்துகின்றோம்

*(கவிஞர் 'கலைமேகம் இப்றாஹீம்' அவர்களின் ஐம்பது வருட இலக்கியப் பணியையும், அகவை எழுபதையும் கௌரவிக்கும் வண்ணம் இக்கவிதை பிரசுரிக்கப்படுகின்றது)*

வல்லோனாம் அல்லாவும் வாய்மொழிந்த குர்ஆனால்
எல்லோருமின் புற்றினிதாயிலங்கி–நல்லோராய்
வாழவழிவகுத்து வளமாக மூதூர்க் கலைமேகமும்
ஆழச்செய்வார் கவியோசை ஆம்.

சிறுகதையும் கட்டுரையும் சிறந்தகவிதைகளும்
பொறுமையுடன் புனைந்து புகழ்பெற்ற - நிறைகுடமே
கலாபூ'ணம் மூதூர்க் கலைமேகமும் கவியால்
நிலாப்போல் ஒளிர்வார் நிலைத்து.

தங்கப் பாளத்தோடு தமிழ் மறையாம் மகரந்தத்தையும்
பொங்கிப் படைத்துப் புனிதமாய் - எங்கள்
முத்தூரும் சிறக்க கலைமேக மென்னும்
உத்தமரும் தருவார் உயர்வு.

ஈழமேக மீண்றெடுத்த இளங்குஞ்சு கலைமேகம்
காளமேகக் கவிக்கொப்பான கவிஞன் - ஈழத்தை
பாட்டாலேபண் படுத்தும் பாவலன் தினமும்
வாட்டம் பறக்க வகுப்பான் வழி.

போற்றுதலும் புகழுதலுமொருவர் உயிரோடிருக்கும் போது
ஆற்றவேனுமக் கடமை அதனால்-ஏற்றம்
பெறுவார் அவர் எழுந்தெழுந்தே
உறுவார் பெருமை உயர்ந்து.

எதிர்காலத்தின் நிகழ்வை இன்றே எழுதும் நீதி
பதியாம் மூதூர்க் கலைமேகம் - கதியின்றி
வாழ்வோர்காய் கருணை மழைபொழியும் கலைமேகமும்
ஏழ்மைபறக்கச் செய்வான் எழுந்து.

ஆக்கம் : *இறால்குழி* சிவகுருநாதன்

பாயிஸா அலி

# கவிதைகள்




**மேலுமிரு வண்ணாத்திகளாய்**

எரித்தபடியும்....
எரிந்து புகையூதியபடியுமாய்
தடதடத்து நகரும்
ரயிலோசையினூடே
சிரிக்கும் உன் குரல்
கையசைத்தபடியே
மெல்ல மெல்ல தேய்ந்து மறையும்.

.......................
.......................

வண்ணப் பூச்சிகளாய் உருமாறி
எமைச் சுற்றிச் சுற்றி சிறகசைக்க
பிள்ளைப் பருவத்து நாமும்
அதன் தோப்புக்குள்ளே
மேலுமிரு வண்ணாத்திகளாய்...!

PUBLIC LIBRARY
JAFFNA

**ஆசிரியர் :** எஸ். பாயிஸா அலி

**வெளியீடு:** கிண்ணியாநெட் வெளியீட்டகம்

**முகவரி:** குறிஞ்சாக்கேணி 03, கிண்ணியா

**விலை:** 250/=

Osai – ISSN-2012-8126